18th November 1963]

நக்கிறார்கள். மும்மொழிக் கொள்கையை நாம் எப்படி நிறைவேற்றி வருகிறோம் என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்னர் இதைப்பற்றி நான் ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுக்கப்போகிறேன்.

ஜிப்சம்

* 254 கேள்வி.—திரு. எஸ். ராமசாமி :
திரு. எஸ். மணி : } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் எங்கெங்கு ஜிப்சம் கிடைக்கிறது ?

(இ) அவற்றில் எங்கெங்கு உள்ளவற்றில் ஜிப்சம் எடுக்கப்பட்டு வருகிறது ?

(உ) அரசினர் புறம்போக்குகளில் உள்ள ஜிப்சம் என்ன செய்யப்படுகிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) & (இ) திருச்சி ஜில்லாவில் பெரம்பலூர், லால்குடி தாலூகாக்களில் சுமார் 22 சதுர மைல் பரப்பில் ஜிப்சம் கிடைக்கிறது. இது ஒதியம், அய்யனுவரம், நம்பக்குரிச்சி, குலக்கா நத்தம், தேரணிபாளையம், சிறுகளப்பூர்; பெருகளப்பூர், பெரிய குறுக்கை, தப்பை முதலிய இடங்களில் எடுக்கப்பட்டு வருகிறது.

(உ) புறம்போக்கு நிலங்களிலிருந்தும், பட்டா நிலங்களிலிருந்தும் எடுக்கப்படும் பெரும்பாலான ஜிப்சம் சிமெண்ட் தொழிற்சாலைக்கு உபயோகப்படுத்தப்படுகிறது.

இவை சம்பந்தமான விவரங்களை அனுப்புவதற்கு திருச்சி கலெக்டரைக் கேட்டிருக்கிறோம். இன்னும் தகவல் கிடைக்கவில்லை.

MR. SPEAKER : Question No. 225 is postponed.

மாமல்லபுரம் துறைமுகம்

* 256 கேள்வி.—திரு. செ. கோ. விசுவநாதன் : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாமல்லபுரத்திற்கு அருகேயுள்ள கல்பாக்கம் கிராமத்தில் அணு மின்நிலையம் அமைக்க இருப்பதால், தூர்ந்துபோன மாமல்லபுரம் துறைமுகத்தைப் புதுப்பிக்க திட்டம் உண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : No.

Procurement of Paddy.

* 257 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the target fixed by the Government for the current harvest season for the procurement of paddy from the millers;

(*b*) the details of the quantity actually procured in each district as on 1st June 1963; and